DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 465/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சந்திரஹாசன் |
| Father / Husband Name | திருமலை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 02.07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சித்தாமூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024 ம் ஆண்டு மதுராந்தகம் மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். கடந்த 25.07.2024 ம் தேதி பகல் 14.00 மணியளவில் நானும் உதவி ஆய்வாளர் குமார் மற்றும் தலைமை காவலர் 303 ராமமூர்த்தி ஆகியோரும் ஒரத்தி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முன்னக்குளம் கிராமம், மாரியம்மன் கோவில் தெருவில் மதுவிலக்கு ரோந்து சென்றபோது, ஒரு வயதான பெண்மணி அவரது வீட்டின் அருகே கோணிப்பையில் எதையோ வைத்து விற்பனை செய்துக்கொண்டிருந்தார். அவர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயற்சி செய்தார், அவரை மடக்கி பிடித்து விசாரணை செய்ததில், அவர் முன்னக்குளம் கிராமத்தை சேர்ந்த குப்பு என்கிற குப்பம்மாள், வயது.70, க/பெ.பம்பையன், என்பது தெரியவந்தது. ஆஜர் எதிரிதான் அந்த நபர். அவரது கையில் இருந்த கோணிப்பையை வாங்கி சோதனை செய்து பார்த்ததில் அதில் 180ML அளவுகொண்ட 6 Old Chef பிராந்தி பாட்டில்கள் இருந்தது.

2. அவரை மேலும் விசாரணை செய்ததில் அவர் சட்டத்திற்கு முரனாக அரசு மதுபானக் கடையில் மதுபானங்களை வாங்கி வந்து கல்லத்தனாக மது விற்பனையில் ஈடுபட்டது தெரியவந்தது. மேற்படி நபரை எங்கள் உதவி ஆய்வாளர் 14.15 மணிக்கு கைது செய்து பொது மக்கள் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தால் அந்த மதுபாட்டில்களை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதன் பின்னர் எதிரியை காவல் நிலையம் அழைத்துவந்து உதவி ஆய்வாளர் அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்தார், அதற்கு நான் உதவியாக இருந்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**